# 24 செபங்களை உருவாக்குதல்

நாம் இயற்றிய செபங்கள் அல்லது மன்றாட்டுகளின் வழியாக எமது இதயத்தில் எழுகின்ற எண்ணங்களையும் மன்றாட்டுகளையும் உண்மையாகவே இறைவனிடம் வெளிப்படுத்தலாம். இதன் வழியாக எமக்கும் இறைவனுக்கும் இடையிலான உறவு வளர்ச்சியடையும். இது ஆழமான செப வாழ்வுக்கு எம்மை இட்டுச் செல்கிறது. இறைவனோடு அன்புறவு கொண்டு நட்புடன் செய்யும் உரையாடல் செபம் எனப்படும். இதற்காக மனப்பாடம் செய்த வாக்கியங்களை விட எமது உள்ளத்திலிருந்து எழுகின்ற எண்ணங்களையும் மன்றாட்டுக்களையும் உண்மையுடன் இறைவன் முன்னிலையில் வெளிப்படுத்துதல் மிகப் பலன்மிக்கதாகும்.

காண்பவை, காணாதவை யாவையும் படைத்த எல்லாம் வல்ல இறை தந்தையை நோக்கி எச் சந்தர்ப்பங்களிலும் செபிக்க வேண்டும். எனவே செபத்தின் வகைகளை நாம் அறிந்திருக்க வேண்டும்.

1. புகழ்ச்சி - இறைவனுக்குப் புகழ்ச்சி கூறும் செபம்
   உதாரணம்:- திருப்பலியின்போது செபிக்கப்படும் நற்கருணை மன்றாட்டு
2. நன்றி - இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட ஆன்மீக, உடல்சார்ந்த அருள்களுக்காக நன்றி கூறிச் செபித்தல்
3. மன்னிப்பு வேண்டல் - நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டுதல்
4. வேண்டுதல்கள் - எமது ஆன்மீக உடல் நல தேவைகளுக்காக இறைவனிடம் வேண்டும் செபம்

இறைதந்தையைஆராதித்து,அவரைப்புகழ்வது எமது கடமையாகும். நாமும் எம்மிடமுள்ள அனைத்தும் இறைமகிமையை வெளிப்படுத்துவதனால் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும்.

அதே போன்று இறை தந்தையால் எமக்கு அளிக்கப்பட்ட படைப்புக்கள், பெற்றோர் போன்ற அனைத்துக்காகவும் நன்றியுடையோராய் வாழ்வது செய்நன்றி மறவாத செயலாகும். நாம் எப்பொழுதும் தவறு செய்கின்றோம் இது இறைவனை மனம் நோகச் செய்கின்றது. இதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும்.

அதேபோன்று எமக்குத் தேவையான அனைத்தையும் இறை தந்தையிடமே கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். எமது தேவைகளை இறைவன் அறிவார். எனினும் நாம் கேட்கும்போது இறைவன்பால் எமக்குள்ள நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வெளிக்காட்டுகின்றோம்.

நாம் பிறர்க்காகவும் செபிக்க வேண்டும். எனினும் நாம் கேட்கும் அனைத்தும் இறைவனுடைய விருப்பத்துக்கமையவே எமக்குக் கிடைக்கும்படி மன்றாட வேண்டும். எமது வேண்டுதல்களில் நன்மையானவற்றை மட்டுமே இறைவன் எமக்குத் தருகிறார். இச் செபத்தின் பண்புகளை எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்த வேண்டும்.

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள செபப் புத்தகம் திருப்பாடல் ஆகும். அதில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள செப வகைகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சில உதாரணங்களை இங்கே காணலாம். நாம் அவற்றைப் பின்பற்றி இறை தந்தையை நோக்கி எப்போதும் செபிக்கக் கற்றுக்கொள்வோம்.

**i.** **புகழ்ச்சிப் பாடல் (திருப்பாடல் 150)**

*‘‘தூயகத்தில் இறைவனைப் போற்றுங்கள்!*
*வலிமை மிகு விண்விரிவில் அவரைப் போற்றுங்கள்!*
*அவர் தம் வல்ல செயல்களுக்காய் அவரைப் போற்றுங்கள்!*
*அவர்தம் எல்லையிலா மாண்பினைக் குறித்து அவரை போற்றுங்கள்!*
*எக்காளம் முழங்கியே அவரைப் போற்றுங்கள்!*
*வீணையுடன் யாழிசைத்து அவரைப் போற்றுங்கள்!*

**ii.** **நன்றி கூறுதல் - (திருப்பாடல் 92)**

*‘‘ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று !*
*உன்னதரே! உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று*
*காலையில் உமது பேரன்பையும்*
*இரவில் உமது வாக்குப் பிறழாமையையும்*
*எடுத்துரைப்பது நன்று*

**iii.** **பாவ மன்னிப்புக்காக மன்றாடல் - (திருப்பாடல் 51)**

*‘‘கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும்!*
*உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத்*
*துடைத்தருளும். என் தீவினை முற்றிலும் நீங்கும் படி*
*என்னைக் கழுவியருளும்! என் பாவம் அற்றுப் போகும்படி*
*என்னைத் தூய்மைபடுத்தியருளும். ஏனெனில் ,என்*
*குற்றங்களை நான் உணர்கின்றேன்! என் பாவம் எப்பொழுதும்*

என் மனக் கண் முன் நிற்கிறது.
உமக்கு எதிராக நான் பாவம் செய்தேன்;
உன் பார்வையில் தீயது செய்தேன்......''

iv. **வேண்டுதல் - (திருப்பாடல் 5)**
''ஆண்டவரே, என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தருளும்;
என் பெருமூச்சைக் கவனித்தருளும்.
என் அரசரே, என் கடவுளே, என் கெஞ்சும் குரலை
உற்றுக்கேளும்;.................
ஆண்டவரே, விடியற்காலையில் என் குரலைக் கேட்டருளும்;
வைகறையில் உமக்காக வழிமேல் விழி வைத்துக்
காத்திருப்பேன்.................

★ திருவிவிலியத்தைப் புரட்டி மேற்கூறப்பட்ட திருப்பாடலை முழுமையாக வாசியுங்கள்

**செயற்பாடு**

1. செப வகைகள் நான்கினதும் பெயர்களை எழுதுக.
2. கீழ்க்காணும் சந்தர்ப்பங்களுக்கேற்ற செபங்களை இயற்றுங்கள்

i. முதல் வெள்ளித் திருப்பலிக்குப் பொருத்தமான விசுவாசிகள் மன்றாட்டுகள் 4.
ii. உமது நண்பன் / நண்பிக்கு எதிராக முறைப்பாடு சொல்லியதற்காக மன்னிப்புக் கேட்கும் செபம்
iii. உமது பிறந்த தினத்தில் இறைவனுக்கு நன்றி கூறும் செபம்.



**வாழ்க்கைக்கு..........**

*எச்செயலை செய்வதற்கு முன்னும் இறைதந்தையிடம் செபிப்பதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்*